
# உடன்பிறப்பே... 63

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சா.கணேசன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

# சா.கணேசன் கழகத்தின் மக்கள் ஊழியர்!


ஓவியம் : ரவி பேலட்

கருப்புத் துண்டு அணியும் பழக்கம் கொண்ட தி.மு.கழகத்தினர் மத்தியில், சிவப்புத் துண்டை அடையாளமாகக் கொண்ட பொதுவுடைமைச் சிந்தனாவாதி, எளிமையில் காந்தியவாதி. கொள்கை நோக்கத்தில் பெரியார், அண்ணா, கலைஞர் என புடம்போட்ட போர்வாள் சா.கணேசன்.

தி.மு.கழகத்தின் தலைமை அலுவலகமாக ராயபுரம், 'அறிவகம்' செயல்பட்ட காலத்தில் தொடங்கி, தேனாம்பேட்டை, 'அன்பகம்', தற்போதைய 'அண்ணா அறிவாலயம்' வரை கால்தடம் பதித்து, கழகப் பணியே கடமை என வாழ்ந்த கண்ணியத்துக்குரிய உடன்பிறப்பு சா.கணேசன். 'மக்கள் மேயர்' என்பது அவர் பெற்ற பெரும்புகழ். 'சா.க' என்பது எல்லோரும் அளித்த எளிய அடையாளம்.

## பின்னி விற்பனையாளர்

திருவள்ளூர் மாவட்டம், குமாரச்சேரியில், 1930-ஆம் ஆண்டு பிறந்தவர் கணேசன். பெற்றோர் பெயர் சாமி-சவுந்தரம்மாள். பத்தாம் வகுப்பு வரை பயின்ற கணேசன், அந்தக் காலத்தில் **'பக்கிங்ஹாம் கர்னாட்டிக் ஆலை'** எனப்படும் **'பின்னி மில்'** நிறுவனத்தின் பாரிமுனை அங்காடியில் விற்பனையாளராக பணியாற்றியவர்.

இளம் வயதிலிருந்தே திராவிடக் கொள்கைகளில் ஈடுபாட்டுடன் இருந்த கணேசன், பின்னி விற்பனையாளராக இருந்தபோதே தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என தலைவர்களுடன் அறிமுகமாகி நெருங்கிப் பழகத் தொடங்கினார்.

1950-ஆம் ஆண்டுகளில் கழகம் தொடங்கப் பட்டபோதே, தன்னை இணைத்துக்கொண்டவர், தி.மு.கழகம் முன்னெடுத்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டார். அப்படி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதாகி சிறை சென்றதால், பணியில் இருந்து நீக்கப்பட்டார். அதன்பின்னர் கழகப் பணியே முழுநேரமானது.

## மாமன்ற உறுப்பினர்

1959-ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாமன்ற தேர்தலின்போது, கழகம் களம் கண்டது. கழகத்தின் வேட்பாளராக நிற்க, கோடம்பாக்கம் கிளையில் இருந்து, சா.க, விருப்ப மனு விண்ணப்பம் செய்திருந்தார். கடும்போட்டிக்கு இடையில், கணேசனை தேர்வு செய்தார் பேரறிஞர் அண்ணா. கழகத்தின் தேர்தல் பொறுப்பாளராக இருந்த கலைஞரின் வழிகாட்டுதலின் கீழ், அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மாமன்ற உறுப்பினராகத் தேர்வானார் கணேசன். தொடர்ந்து, 1964-ஆம் ஆண்டு, 1968-ஆம் ஆண்டு என சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக, 92-வது வட்ட மக்கள் கணேசனையே தேர்வு செய்தனர்.

அந்த வகையில், தென் சென்னை மற்றும் மத்திய சென்னைப் பகுதிகளில் கழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர்களில் கணேசனும் ஒருவராக இருந்தார். அந்த அடையாளமே 1970-ஆம் ஆண்டில் சென்னை மேயராக அவருக்கான வாய்ப்பினைக் கொண்டு வந்தது.

## மக்கள் மேயர்

1971-ஆம் ஆண்டில் வங்கதேசப் பிரச்சினை தீவிரமடைந்தபோது, 'வங்கதேச உதயம் அவசியம்' என சென்னை மாநகராட்சியில், தீர்மானம் நிறைவேற்றியவர் சா.கணேசன். காவிரிப் பிரச்சினை, சென்னைக்கு வீராணம் ஏரி குடிநீர் என முக்கிய தீர்மானங்களை மாநகராட்சி மன்றத்தில் நிறைவேற்றினார்.

மும்பையில் நடந்த அகில இந்திய மேயர்கள் மாநாட்டில், எல்லா மாநகராட்சிகளிலும் ஒரே மாதிரியான வரிவிதிக்கும் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிற தீர்மானத்தை, அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியிடம் வழங்கி, தமிழ்நாட்டுக்கும் கழகத்துக்கும் பெருமை சேர்த்தவர் கணேசன்.

சென்னை மாநகரின் தொலைநோக்குத் திட்டங்களுக்கு வித்திட்டவர். மாநகர மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து வைப்பதில், தனிமுத்திரை பதித்தவர் என்பதால்தான், **'மக்கள் மேயர்'** என அழியாப் புகழ் பெற்றார் கணேசன். ஊழியர்களை சுயமரியாதையுடன் நடத்துவது, அவரது அடிப்படைப் பண்பு. ஆங்கிலத்தில் இருந்த சென்னை தெருக்களின் பெயரை, தமிழில் மாற்றிக் காட்டியது, சா.க செய்த சாதனைகளில் ஒன்று.

## எளிமையே அடையாளம்!

எளிமையே இவர் அடையாளம் என்பதால், எப்போதும் பொதுப் போக்குவரத்துதான். மேயராக இருந்தபோதும் பேருந்தில் மக்களோடு மக்களாகப் பயணித்தார். 1989-ஆம் ஆண்டில் தி.நகர் தொகுதியில் இருந்து சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானபோதும் பேருந்துப் பயணம்தான். 85 வயதில் பேருந்து ஏறுவதற்காக, கூட்டத்தோடு கூட்டமாக, சிவப்புத் துண்டு அணிந்த சா. கணேசனை கோடம்பாக்கம் சாலைகளில் பலரும் பார்த்ததுண்டு.

**இன்றையக் கழகத் தலைவரும் சா.கணேசனும் இந்தோ - சோவியத் நட்புறவுக் கழகம் சார்பில், சோவியத் யூனியனுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்கள்.**

கால் பந்தாட்ட வீரராக பல பதக்கங்களை வாங்கியவர் கணேசன். ஆனால், அந்தப் பதக்கங்களை எல்லாம் வெவ்வேறு நேரங்களில் கல்வி உதவி தேடி வருபவர்களுக்காக விற்பனை செய்யவும் தயங்கியதில்லை. ஆனால், எந்தச் சூழலிலும் எந்த எதிர்பார்ப்போடும் தலைமையை அணுகியதில்லை. அந்த வகையில், சமரசம் செய்து கொள்ளாத கொள்கை வீரராக திகழ்ந்தவர்.

## ஈழமும் இலக்கியமும்

கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட **'டெசோ பேரணிகள்', 'மதுரை மாநாடு'** போன்ற நிகழ்வுகளில் எல்லாம் கணேசன் தீவிரமாகச் செயல்பட்டவர். கலைஞரின் உணர்வறிந்து பணிகளைச் செய்து முடிக்கக் கூடியவர் கணேசன். கழகத்தின் தலைமை நிலையச் செயலாளராகவும், செய்தித் தொடர்புச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தபோது, அவரின் அந்த ஆற்றலை 'கண்ணியத்துக்குரிய பக்கங்கள்' எனப் பதிவு செய்கின்றனர், கழகத் தோழர்கள்.

வயது மூப்பு காரணமாக அரசியல் பணிகளைக் குறைத்துக் கொண்டு, இலக்கியப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார். அதையொட்டி, அவர் மேற்கொண்ட இலங்கைப் பயணம் முக்கியமானது. அந்தப் பயணம் ஈழத் தமிழர் நலன் கொண்டதாக இருந்தது. ஈழப் போராட்டத்தில் அக்கறை கொண்டிருந்த கணேசன், போராளிகள் மீது அக்கறை கொண்டு அப்போது உதவிகளைச் செய்தவர். தமிழர் ஒற்றுமை மாநாட்டுக்காக அமெரிக்கா சென்றவர், என்பது குறிப்பிடத்தக்கது.

## மிசா சிறைவாசி

மிசா சிறைவாசத்தின்போது சென்னை, மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் சா.கணேசன். அங்கு கொட்டடிக் கொடுமையை தாங்கிய இளைஞராக, இன்றைய கழகத் தலைவர் அவர்களைப் பாதுகாத்தவர்களில் கணேசனும் ஒருவர். கலைஞரின் மகன் என்பதாலும், கழகத்தின் இளம் தலைமுறை என்பதாலும், கழகத்தின் மீதும், கலைஞரின் மீதும் எவ்வளவு பற்று வைத்தாரோ, அதே அளவு பற்றினை இன்றைய கழகத் தலைவர் அவர்கள் மீதும் சா.க., பற்றும் பாசமும் வைத்திருந்தார். தவிர, இன்றைய கழகத் தலைவரும் சா.கணேசனும் இந்தோ - சோவியத் நட்புறவுக் கழகம் சார்பில், சோவியத் யூனியனுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்கள்.

2018-ஆம் ஆண்டில், ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதி, தனது 88-வது வயதில், வயதுமூப்பு காரணமாக இயற்கை எய்தினார் சா.க. அவரது இறுதி ஊர்வலத்தில், கழகத்தினர் திரண்டு வந்து, கருப்பு சிவப்புக் கொடி போர்த்தி மரியாதை செய்தனர். அவரது புகைப்படத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய கழகத்தலைவர் அவர்கள்,

"தன்னலம் பார்க்காமல் கட்சிக்காக உழைத்த, சுயநலம் பார்க்காமல் பொதுநலம் ஒன்றை மனதில் வைத்து, இந்த மாநகர மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதற்காகப் பாடுபட்ட ஒரு தொண்டரின் படத்தை; தொண்டர் என்பதை விட, மக்கள் ஊழியர் படத்தை, அதுவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் ஊழியரின் படத்தை இங்கே திறந்து வைத்திருக்கிறேன்." எனக் குறிப்பிட்டார். 'மக்களின் ஊழியர்' ஆவது எளிதல்ல; மகத்தான வாழ்வினை வாழ்வது. மகத்தான மனிதர்கள் வரிசையில் சா.கணேசன் என்றும் நினைவுகூரப்படுவார்.

**...துடிக்கும்**

## மோசடித் தேர்தல்! முறைகேடான தேர்வுகள்!




இந்தியப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் மற்றும் இளநிலை ஆராய்ச்சி நிதியுதவி பெறுவதற்கான தகுதியைத் தீர்மானிப்பதற்காக, தேசியத் தேர்வு முகமை சார்பில், 'யு.ஜி.சி. நெட் தேர்வு' நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வு நாடு முழுவதும், கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கடந்த சில ஆண்டுகளாக கணினி வழியாக நடைபெற்ற 'நெட் தேர்வு' இம்முறை 'ஓ.எம்.ஆர். சீட்' முறையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிலையில், நெட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக, தேசிய சைபர் குற்றப் பிரிவிலிருந்து தகவல் வந்திருப்பதாகவும், இதனால் ஒன்றிய கல்வி அமைச்சகமும், ஒன்றிய அரசும் இணைந்து, இந்த ஆண்டுக்கான நெட் தேர்வை ரத்து செய்வது என முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதை சி.பி.ஐ. விசாரிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. 1,200 மையங்களில் 9 லட்சம் பேர் எழுதிய தேர்வு இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது.

நெட், நீட் என அனைத்துத் தேர்வுகளையும் நடத்தும் ஆணையம், ஊழலின் ஊற்றுக்கண்ணாக இருக்கும் போல் தெரிகிறது. தேர்தலிலும் மோசடி, தேர்வுகளிலும் முறைகேடு. இதுதான் பா.ஜ.க நடத்தும் ஆட்சியின் லட்சணம்!

## ஃப்ளாஷ்பேக்


வே.பன்னீர்செல்வம்

### தடம் மாறாப் பயணம்!



1976-ஆம் ஆண்டு நெருக்கடி நிலையைக் காரணம் காட்டி, கழக ஆட்சி கலைக்கப்பட்டது. அப்போது, கழக முன்னோடிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், தொண்டர்கள் சாரை சாரையாக முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்து உரம் பாய்ச்சினர். கோவை மு.இராமநாதன் அவர்களால் 'உடன்பிறவாத சகோதரர்' என்று அழைக்கப்பட்ட என்னுடைய தந்தை வேலாயுதமும் தலைவர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் சென்று சந்தித்து வந்தார். இந்தப் புகைப்படத்தைப் பார்க்கையில், 'தந்தை வழியில் தடம் மாறாமல் நடைபோடுகிறேன்' என பெருமையாக இருக்கும்.

**- வே.பன்னீர்செல்வம்,**
**மாவட்டப் பிரதிநிதி, கோவை மாநகர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### புரட்சிக் கவிஞருக்கு பொற்கிழி!

1946-ஆம் ஆண்டு, புரட்சிக் கவிஞருக்கு விழா எடுத்து, பணமுடிப்பு வழங்கத் திட்டமிட்டார் பேரறிஞர் அண்ணா. அதற்காக முழுமூச்சுடன் நிதி திரட்டி, ரூ.25,000 பணமுடிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில், அண்ணா, பொற்கிழியை இரு கைகளிலும் ஏந்திக் கொண்டு கவிஞருக்கு முன்னால் நீட்டி, அதனை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். 'கொடுப்பார் கைதான் எப்பொழுதும் உயர்ந்து இருக்க வேண்டும். வாங்குபவர் கை எப்பொழுதும் தாழ்ந்துதான் இருக்க வேண்டும்' என்று கூறி, தன் இரு கைகளையும் நீட்டி நின்றார், புரட்சிக் கவிஞர். கவிஞரின் விருப்பத்திற்கிணங்க பொற்கிழியை அவர் கைகளில் வைத்தார் அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

516

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131